பத்திரிக்கை செய்தி

அரசு ஆவணங்களில் திருத்தம் செய்து அரசுக்கு நிதி இழப்பு மற்றும் முறைகேடு செய்த குற்றத்திற்காக அப்போதைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறையின் முன்னாள் மாவட்ட அலுவலர் மற்றும் கூட்டுறவு சங்கத்தின் உப தலைவர்களுக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

கரூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறைக்கு ஒதுக்கீடு செய்த அரசு நிதியினை ஆவணங்களில் திருத்தம் செய்ய அப்போதைய கரூர் மாவட்ட ஆதிதிராடர் மற்றும பழங்குடியினர் துறையின் மாவட்ட அலுவலர் திரு.ஜவகர், மற்றும் தச்சு மற்றும் கொள்ளு தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் உப தலைவர்கள் திரு.கணேசன் மற்றும் திரு.தங்கவேல் ஆகியோர்கள் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் வழக்கு கடந்த 2005-2006 வருடத்தில் பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கானது கரூர் மாவட்ட முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் நேற்று 18.06.2026 திரு.ஜவகர், ஆதிதிராடர் மற்றும பழங்குடியினர் துறையின் மாவட்ட அலுவலர் மற்றும் திரு.கணேசன், உப தலைவர் ஆகியோர்களுக்கு 4 ஆண்டுகள் சாதாரண சிறை தண்டனையும் மொத்தம் ரூ.3,30,000/- அபராதமும், திரு.தங்கவேல், உபதலைவர் அவர்களுக்கு 4 ஆண்டுகள் சாதாரண சிறை தண்டனையும், ரூ.1,20,000/- விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.